# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13181/F/2023**

திரு.பா.ராதாகிருஷ்ணன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம்-612001. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.பா.ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.P.ரவி, துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிட்., கும்பகோணம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 27/04/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் இயங்கும் அரசு பொது போக்குவரத்து பேருந்துகள் இயங்க அரசு நிர்ணயம் செய்த காலஅளவு எவ்வளவு என்ற தகவல் மற்றும் அதன்

அரசாணையின் நகல் வழங்குவது என்பன போன்ற 2 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 10.05.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுவை 6(3)ல் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட் அவர்களுக்கு மாற்றம் செய்துள்ளார். மனுதாரர் தனக்கு தகவல் கிடைக்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(1)ன் கீழ் 29.05.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 05.06.2023 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழான 21.07.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 05.06.2023 மற்றும் 21.07.2023 தேதியிட்ட கடிதம் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (07.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, பொது அதிகார அமைப்பினால் 05.06.2023 மற்றும் 21.07.2023 தேதியிட்ட கடிதம் மூலம் இனம் வாரியாக தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதை உறுதி செய்து இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13181/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்
(கும்பகோணம்) லிமிட்,
27, புகைவண்டி நிலைய புதுச்சாலை,
கும்பகோணம்-612001.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.பா.ராதாகிருஷ்ணன்,
த/பெ பாண்டி,
999, மேலத்தெரு,
வடக்கு சாலைக்கிராமம்,
சாலைக்கிராம அஞ்சல்,
இளையான்குடி வட்டம், சிவகங்கை-630710.

Copy to file: KR/PA